ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1768/12 - 2012 ජූලි මස 24 වැනි අඟහරුවාදා - 2012.07.24

*1768/12 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.- 6/2001*

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்**

*2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

*தவிசாளர்,*
*இலங்கைக் காப்புறுதிச் சபை.*

*கொழும்பு,*
*2012, யூலை 20.*

*விதிகள்*

*1. 2004, மே 17 ஆந் திகதிய 1341/8 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 2011, மாச்சு 18 ஆந் திகதிய 1697/ 27 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியினால் திருத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டின் கடனிறுப்பு விளிம்பு (பொதுக் காப்புறுதி) விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-*

*(1) அதன் 4 ஆம் விதியின் (1) ஆம் உப - விதியில் -*

*(அ) அதன் (இ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-*

*"(iv) சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள் விடயத்திற் கேற்றவாறு, முதலும் வட்டியும் அல்லது முதிர்ச்சிப்பெறுமானம், முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது பங்குத் தொகுதிப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தப்பட்டதும் சாதனத்திற்கான முதலீட்டுத் தர மதிப்பீடு ஒன்றைக் கொண்டுள்ளதுமான கம்பெனி ஒன்றினால் வழங்கப்பட்ட சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள்".* - 10 %

*(ஆ) அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-*

*"(ஈஈ) ஏதேனும் வங்கியில் உள்ள நடைமுறைக் கணக்கு மீதி :* - 4 %

ஆயினும் காப்புறுதியாளரின் பிரதான நிதி அலுவலர், அதனது காலாண்டு மற்றும் ஆண்டு திரட்டுடன் சபைக்கு எழுத்திலான சான்றுப்படுத்தல் ஒன்றையும் அத்துடன் கடனிறுப்பு விளிம்பு கணிப்பீட்டுக்கென கவனத்திற் கொள்ளப்படும் நடைமுறைக் கணக்கு மீதிகளை உறுதிப்படுகின்ற அதனது மாதாந்த திரட்டுகளை சபையினால் தேவைப்படுத்தும் போதெல்லாம் சமர்ப்பித்தல் வேண்டும்".

(2) அதன் 5அ என்னும் விதியின் (அ) மற்றும் (ஆ) என்னும் உட்பந்திகளிற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டிருக்கும்பட்சத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்ககப்பட்ட உருவகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய சொத்து அல்லது உருவகம் -

(i) கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றினால் மதிப்பிடப்பட்டிருப்பின் அத்துடன் அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச சர்வதேச தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருப்பின் அல்லது குறைந்தபட்ச சர்வதேச தேவைப்பாடுகளாக காலத்திற்குக்காலம் அந்தந்த கடன் மதிப்பீடு முகவராண்மையினால் வழங்கப்பட்ட வேறு முதலீட்டு தர மதிப்பீட்டு வகுப்பாக்கத்தை நிறைவேற்றியிருப்பின் ; அல்லது

(ii) காலத்திற்குக்காலம் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கடன் மதிப்பீட்டு முகவராண்மை, அத்தகைய கடன் மதிப்பீட்டு முகவராண்மையினால் வழங்கப்பட்ட குறைந்தபட்ச முதலீட்டுத் தர மதிப்பீட்டு வகுப்பாக்கத்தை நிறைவேற்றியிருப்பின்

மட்டும் ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) (i) இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டிருக்கும்பட்சத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்ககப்பட்ட உருவகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய சொத்து அல்லது உருவகம் ; அல்லது

(ii) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச்சட்டத்தின் கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றாக பதிவு செய்யப்பட்ட வேறு எவரேனும் ஆள் அத்தகைய கடன் மதிப்பீட்டு முகவராண்மையினால் வழங்கப்பட்டகுறைந்தபட்ச முதலீட்டு தர மதிப்பீட்டு வகுப்பாக்கத்தை நிறைவேற்றியிருப்பின் ;

மட்டுமே ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(3) அதன் 8 ஆம் விதியில் "முதலீட்டுத் தரமதிப்பீடு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"முதலீட்டுத் தர மதிப்பீடு" என்பது முற்போந்த பதினெட்டு மாத காலப்பகுதியினுள் கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றினால் குறித்தொதுக்கப்பட்ட கடன் மதிப்பீடு ஒன்று எனப் பொருள்படும்.".

8- 262/1

---

ச. வ. பீ.- 6/2001

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்**

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.

தவிசாளர்,
இலங்கைக் காப்புறுதிச் சபை.

கொழும்பு,
2012, யூலை 20.

விதிகள்

1. 2002, செத்தெம்பர் 24 ஆந் திகதிய 1255/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2011, மாச்சு 18 ஆந் திகதிய 1697/27 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் திருத்தப்பட்டதுமான 2002 ஆம் ஆண்டின் கடனிறுப்பு விளிம்பு (நீண்டகாலக் காப்புறுதி) விதிகள் இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அதன் 13 ஆம் விதியின் (1) ஆம் உப - விதியில் -

(அ) அதன் (இ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்திக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(iv) சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள் விடயத்திற் கேற்றவாறு, முதலும் வட்டியும் அல்லது முதிர்ச்சிப்பெறுமானம், முதலீட்டுத்தர மதிப்பீட்டைக் கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கி ஒன்றினால் உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது பங்குப் பரிவர்த்தனை ஒன்றில் நிரற்படுத்தப்பட்டதும் சாதனத்திற்கான முதலீட்டுத் தர மதிப்பீடு ஒன்றைக் கொண்டுள்ளதுமான கம்பெனி ஒன்றினால் வழங்கப்பட்ட சொத்துக்களால் ஆதரிக்கப்பட்ட பிணையங்கள்" - 10 %

(ஆ) அதன் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(ஈஈ) ஏதேனும் வங்கியில் உள்ள நடைமுறைக் கணக்கு மீதி : - 4 %

ஆயினும் காப்புறுதியாளரின் பிரதான நிதி அலுவலர், அதனது காலாண்டு மற்றும் ஆண்டு திரட்டுடன் சபைக்கு எழுத்திலான சான்றுப்படுத்தல் ஒன்றையும் அத்துடன் கடனிறுப்பு விளிம்பு கணிப்பீட்டுக்கென கவனத்திற் கொள்ளப்படும் நடைமுறைக் கணக்கு மீதிகளை உறுதிப்படுகின்ற அதனது மாதாந்த திரட்டுகளை சபையினால் தேவைப்படுத்தும் போதெல்லாம் சமர்ப்பித்தல் வேண்டும் ".

(2) அதன் 14அ என்னும் விதியின் (அ) மற்றும் (ஆ) என்னும் உட்பந்திகளிற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(அ) இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்ககப்பட்ட உருவகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அத்தகைய சொத்து, விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய சொத்து அல்லது உருவகம் :-

(i) கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றினால் மதிப்பிடப்பட்டிருப்பின் அத்துடன் அட்டவணையின் பாகம் I இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச சர்வதேச தேவைப்பாடுகளை நிறைவேற்றியிருப்பின் அல்லது குறைந்தபட்ச சர்வதேச தேவைப்பாடுகளாக காலத்திற்குக்காலம் அந்தந்த கடன் மதிப்பீடு முகவராண்மை யினால் வழங்கப்பட்ட வேறு முதலீட்டு தர மதிப்பீட்டு வகுப்பாக்கத்தை நிறை வேற்றியிருப்பின் ; அல்லது

(ii) காலத்திற்குக்காலம் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கடன் மதிப்பீட்டு முகவராண்மை, அத்தகைய கடன் மதிப்பீட்டு முகவராண்மையினால் வழங்கப்பட்ட குறைந்தபட்ச முதலீட்டுத் தர மதிப்பீட்டு வகுப்பாக்கத்தை நிறைவேற்றியிருப்பின் ;

மட்டுமே ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) (i) இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டிருக்கும்பட்சத்தில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்ககப்பட்ட உருவகம் ஒன்றினால் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய சொத்து அல்லது உருவகம் ; அல்லது

(ii) 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக் குழுச்சட்டத்தின் கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றாக பதிவு செய்யப்பட்ட வேறு எவரேனும் ஆள் அத்தகைய கடன் மதிப்பீட்டு முகவராண்மையினால் வழங்கப்பட்ட குறைந்தபட்ச முதலீட்டுத் தர மதிப்பீட்டு வகுப்பாக்கத்தை நிறைவேற்றியிருப்பின் ;

மட்டுமே ஏல்தகவுடையதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

(3) அதன் 17 ஆம் விதியில் "முதலீட்டுத் தரமதிப்பீடு" என்ற சொல்லமைப்பின் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :-

"முதலீட்டுத் தர மதிப்பீடு" என்பது முற்போந்த பதினெட்டு மாத காலப்பகுதியினுள் கடன் மதிப்பீட்டு முகவராண்மை ஒன்றினால் குறித்தொதுக்கப்பட்ட கடன் மதிப்பீடு ஒன்று எனப் பொருள்படும்;".

8- 262/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.